**ஆட்கடத்தலைத் தடுத்து நிறுத்துவதற்காக இலங்கையுடனும் இந்தியாவுடனும் அவுஸ்திரேலியா உறவுகளை உறுதிப்படுத்துகிறது.**

2017 ஆம் ஆண்டு மே மாதம், அவுஸ்திரேலிய எல்லைப் படையினுடைய (Australian Border Force) மிகப்பெரிய ரோந்துக் கப்பல் *Ocean Shield* முதல் முறையாக இலங்கையிலும் இந்தியாவிலும் துறைமுகங்களுக்கு உத்தியோகபூர்வமாக வருகை தந்திருந்தது. இலங்கை கடற்படையுடனும் இந்திய கடலோர காவல்படையுடனும் அவுஸ்திரேலிய எல்லைப் படை யின் பணிக் குழு. (Australian Border Force) அறிவைப் பகிர்ந்து கொண்டனர் அத்துடன் செயல்பாட்டு நடவடிக்கைகளை செயற்படுத்தினர்.

இந்த வருகைகள் ஏன் முக்கியம் என்பதை அவுஸ்திரேலியாவின் எல்லைகளின் அரசுரிமைக்கான நடவடிக்கை (Operation Sovereign Borders) யின் தளபதி Air Vice-Marshal Stephen Osborne விளக்கினார்.

"ஆட்கடத்தல் ஒரு உலகளாவிய பிரச்சனை. எங்களுடைய சர்வதேச பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், இந்தக் குற்றவாளிகளைத் தோற்கடிப்போம், மக்களின் உயிர்களைக் காப்பாற்றுவோம், "என்று அவர் கூறினார்.

ஆற்றல் வாய்ந்த சர்வதேச ஒத்துழைப்பும் தகவல் பகிர்வும் ஆட்கடத்தும் படகுகளை நிறுத்த அவுஸ்திரேலியாவின் திறனை மேம்படுத்தியுள்ளது என்று ஏர் வைஸ் மார்ஷல் (Air Vice-Marshal) Osborne கூறினார்.

"இந்த ஆண்டின் முற்பகுதியில் ஸ்ரீலங்காவின் அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் 25 இலங்கையர்களைக் கொண்ட படகு ஒன்றை அவுஸ்திரேலியா தடுத்து நிறுத்தியது. அந்தப் படகில் பயணம் செய்த 25 பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்."

ஆட்கடத்தும் படகு கடைசியாக அவுஸ்திரேலியாவின் கடற்கரைகளை வந்து சேர்ந்து 1000 நாட்களுக்கும் மேலாகிவிட்து. ஆட்கடத்தல் காரணமாகக் கடலில் இடம்பெற்ற கடைசி இறப்பு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகும்.

ஆட்கடத்தலுக்கு எதிரான போராட்டத்தில் அவுஸ்திரேலியாவும் எங்களுடைய சர்வதேச பங்காளிகள் செய்த முன்னேற்றமும் இருந்தபோதிலும், எங்களுடைய பிராந்தியத்தில் உள்ள கடத்தல்காரர்கள் பாதிக்கப்படக்கூடிய மக்களை தங்கள் பணத்தை ஒப்படைக்க நம்ப வைக்க முயற்சி செய்கிறார்கள் அத்துடன் படகில் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குப் பயணம் செய்ய முயற்சிக்கின்றனர்.

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக வர முயற்சிப்பதன் மூலம் தங்கள் வாழ்வை ஆபத்துக்குள்ளாக்கவும், தங்கள் பணத்தை வீணடிக்கவும் வேண்டாமென்று தங்கள் வெளிநாட்டு உறவினர்களுக்கு இலங்கை-அவுஸ்திரேலிய சமூக உறுப்பினர்களைத் தெரிவிக்கும்படி ஏர் வைஸ் மார்ஷல் (Air Vice-Marshal) Osborne ஊக்குவிக்கின்றார்.

"சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவை அடைய முயற்சிப்பது ஆபத்தானது மற்றும் பயனற்றது. அவுஸ்திரேலியாவை அடைய முயற்சிக்கும் எந்த ஆட்கடத்தும் படகும் நிறுத்தப்பட்டுத் திருப்பி அனுப்பப்படும். அவுஸ்திரேலியாவிற்கான சட்டவிரோதமான பாதை மூடப்பட்டுள்ளது. அவை தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கும்."

மேலும் தகவலுக்கு www.osb.border.gov.au எனும் வலைத்தளத்தைப் பார்க்கவும்.

1 - RADM Travis Sinnah இலங்கை கடற்படையின் கிழக்குத் தளபதிக்காக (Eastern Commander) Ocean Shield, இன் கட்டளை அதிகாரி, (Commanding Officer) Alan Champkin Ocean Shield ஐ சுற்றிப் பார்ப்பதை நடத்துகின்றார்

2 – காவல் படையின் உத்தியோகத்தர் (Officer of the Guard), லெப்டினென்ட் PJ Bakelmun, கண்காணிப்பாளர் (Superintendent) Alan Champkin ஓசன் சீல்டின் கட்டளை அதிகாரியை (Commanding Officer of Ocean Shield) இலங்கைக்கு வரவேற்கின்றார்